முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 23/2021

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 07 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : சிவராமலிங்கம்

தந்தை பெயர் : நடராஜன்

முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 23–05–1941ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 20–10–1962ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு சான்று நகல் **வா.சா.ஆ.2** ஆகும். **கடந்த 15–05–1995ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தினை தாக்கல் செய்கிறேன். கடந்த 19–09–1996ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தினை தாக்கல் செய்கிறேன்.** கடந்த 09.11.2020ம் தேதியிட்ட புகார் மனுவின் கை நகல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 23–05–2000ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 20–02–2015ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.5** ஆகும். கடந்த 22–07–2015ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் **வா.சா.ஆ.6** ஆகும். என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வருமான வரி கணக்கு அட்டையின் சுய சான்று நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் தொடர் முதல் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

T PRAVEEN KUMAR

Digitally signed by T PRAVEEN KUMAR
Date: 2024.11.07 16:43:36 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.